புதுச்சேரி நகராட்சி
வருவாய் பிரிவு-2
புதுச்சேரி
*****

எண்: 1169 /P.M /R.O.2 / A.5 /2023 தேதி: 03 JUL 2023

## அறிவிப்பு

புதுச்சேரி நகராட்சிக்கு சொந்தமான வணிக வளாகங்களில் காலியாக உள்ள 68 கடைகளின் உரிமங்களை மூன்று ஆண்டு காலத்திற்கு (01.08.2023 to 31.07.2026) மின்னணு ஏலம் விடுவதற்கான விண்ணப்பங்கள் புதுச்சேரி நகராட்சி மன்றம் சார்பாக, புதுச்சேரி நகராட்சி ஆணையர் அவர்களால் பொதுமக்களிடமிருந்து பின்வருமாறு கோரப்படுகிறது.

புதுச்சேரி நகராட்சிக்கு சொந்தமான காலியாக உள்ள 68 கடைகளை மின்னணு ஏலம் விடுவதற்கான கால அட்டவணை

| வ.எண் | விவரங்கள் | கால அட்டவணை |
|---|---|---|
| அ | மின்னனு ஏல விண்ணப்ப படிவம் விணியோகம் (பதிவிரக்கம்) செய்யும் தேதி | 10.07.2023 முதல் 17.07.2023 (பிற்பகல் 3.30 வரை) |
| ஆ | ஏலம் கோருவதற்கான அறிவிப்பில் இடம் பெற்றிருக்கும் ஏல முன் வைப்புத்தொகை செலுத்தும் தேதி | 11.07.2023 முதல் 17.07.2023 (பிற்பகல் 3.30 வரை) |
| இ | ஏலம் கோருவதற்கான விண்ணப்ப படிவம் சமர்பிப்பதற்கான கடைசி தேதி மற்றும் நேரம் | 17.07.2023 (பிற்பகல் 3.30 வரை) |
| ஈ | மின்னனு ஏலம் நடைபெறும் தேதி மற்றும் நேரம் | 20.07.2023 (காலை 11.00 மணி முதல் மாலை 5.00 வரை) |

மின்னனு ஏலத்தில் கலந்துகொள்பவர்கள் தங்கள் விண்ணப்பத்தினை ஏலம் விடப்படும் காலத்திற்கு கணக்கிடப்பட்ட குறைந்த பட்ச மாதாந்திர ஏலத் தொகையில் 20% தொகையை ஏல முன்வைப்புத் தொகையாக (EMD) புதுச்சேரி நகராட்சி ஆணையர் பெயரில் எடுக்கப்பட்ட கேட்பு காசோலை (விரும்பத்தக்கது) மற்றும் மின்னனு ஏல விண்ணப்பம் சமா்பிப்பதற்காக நிர்ணயிக்கபட்ட கடைசி தேதி மற்றும் நேரத்திற்குள் எண்: எச்.எம்.காசிம்வீதி (அரசு மார்பக நோய் பிரிவு) பக்கத்தில் இயங்கிவரும் நகராட்சியின் வருவாய் பிரிவு-2 அலுவலகத்தில் சமா்பிக்கவேண்டும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட இந்தியன் ஓவா்சீஸ் வங்கி(நகர கிளை) கணக்கு எண்: 151601000005000, **IFSC Code IOBA** 0001516-ல் கடைசி தேதிக்குள் செலுத்த வேண்டும். விதிமுறைகளும் வரைமுறைகளும், ஏலம் கோரும் அறிவிப்பு (NIT) ஏல விவரங்கள், மின்னனு ஏல அறிவிப்பு, மாதாந்திர குறைந்தபட்ச ஏலத்தொகை போன்றவற்றை https://www.py.gov.in மற்றும் www.pdymun.in வளைதளங்களில் பதிவிறக்கம் செய்து பார்வையிட முடியும். ஏல அறிவிப்பில் தேவைப்படும் திருத்தங்கள் மாற்றங்கள் எதுவாயினும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள வளைதளங்களிலேயே மேற்கொள்ளப்படும்.

(S. சிவகுமார்)
ஆணையர்

விலை ரூ.500.00 (ரூபாய் ஐநூறு மட்டும்)

ரசீது எண் :

நாள் :

வ.அ. / உ.வ.அ :

எண்:. 1169 / பு.ந /வ.அ.பி-2 /அ.5/2023 -- 2024

# புதுச்சேரிநகராட்சி
# (வருவாய்பிரிவு-2)

***

புதுச்சேரி நகராட்சிக்கு சொந்தமான கடை வளாகங்கள் மற்றும் அங்காடிகளில் உள்ள புதிய காலி செய்யப்பட்ட கடைகளுக்கு நடைபெறும் மின்னனு ஏலத்தில் பங்குபெறுவதற்கான விண்ணப்பம்.

1. விண்ணப்பதாரரின் பெயர் (தனித்தனி எழுத்தில் தெளிவாகஎழுதவும்) :
2. தகப்பனார் / கணவர்பெயர் :
3. விண்ணப்பதாரரின் நிலை (தனிநபர் / கூட்டு நிறுவனம் / கூட்டுறவுசங்கம் / இதர பிரிவு) :
4. தற்போதைய தொழில் மற்றும் ஆண்டுவருமானம் :
5. கடிதத் தொடர்புக்கான முகவரி :
6. விண்ணப்பதாரரின் நிரந்தர குடியிருப்பு முகவரி குடும்ப அடையாள அட்டை நகல் இணைக்கவும்) :
7. ஆதார் எண் (நகல் இணைக்கவும்) :
8. ஏலம் கேட்க விரும்பும் கடை எண் மற்றும் கடை வளாகத்தின் அங்காடியின் பெயர் :
9. ஏலம் கேட்க இருக்கும் உரிமத்தின் விபரம் (ஆம் எனில் ஆதாரம் இணைக்கவும்) : General/SCST/Physically Handicapped / Freedom Fighter/ Women/Pensioner/ Ex-Serviceman
10. பிணைவைப்புத்தொகையின் விவரம் (EMD) : Name of the Bank: Branch

    DD/Banker's Cheque No: Dt:

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் யாவையும் யான் நன்கு அறிந்த வகையில் உண்மை என்றும், நம்பகமானவை என்றும் உறுதிகூறுகிறேன். அப்படி ஏதாகினும் பின்னாளில் தவறான தகவல்கள் அளிக்கப்பட்டது என்று தெரிய வந்தால் உடனடியாக எனக்கு அளிக்கப்பட்ட உரிமத்தை ரத்து செய்யவும் சம்மதிக்கிறேன். மேலும், புதுவை நகராட்சியின் சட்டம் மற்றும் விதிமுறைகள், உரிமங்கள் குறித்த நிபந்தனைகள் அவ்வப்போது இயற்றப்படும் தனி பொதுக்கட்டுபாடுகள் மற்றும் உரிமம்குறித்து செய்துகொள்ளப்படும் உடன்படிக்கையின் நிபந்தனைகள் அனைத்திற்கும் கட்டுப்பட்டு நடப்பேன் என்றும் இதன் மூலம் உறுதி கூறுகிறேன்.

விண்ணப்பதாரரின் கையொப்பம்

இடம் :

நாள் :

குறிப்பு

1). விண்ணப்பத்தொகை மற்றும் பிணைவைப்புத்தொகைக்கான (EMD) வரைவோலை / Bankers cheque விண்ணப்பத்துடன் கட்டாயம் இணைக்கப்படவேண்டும்

2). ஏலம் கேட்க விரும்பும் கடை இடஒதுக்கீட்டில் ( Reserved Category) இருப்பின் அதற்கான நான்றிதழ் கட்டாயம் இணைக்கப்படவேண்டும்.

3). உரிமம் குறித்த ஏலத்திற்கான விளக்கக் குறிப்புகளும் நிபந்தனைகளும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

குறிப்பு :உரிமம்குறித்தஏலத்திற்கானவிளக்கக்குறிப்புகளும்,நிபந்தனைகளும்இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

Note: The expression Scheduled Caste / Scheduled Tribe shall have the same meaning respectively given to them under articles 336(4) 56(25) of the Constitution respectively.

The expression physically handicapped shall be construed in the same way as it is construed for purposes of reservation in Services.

The expression freedom fighter shall have the same meaning as given to it under the Pondicherry Freedom Fighters Rules 1970.

The expression women means widowed women, a destitute woman or woman legally separated from her husband, whose income from all sources does not exceed Rs.6,000/- per annum.

The expression Ex-serviceman shall have the same meaning as given to it as it is for purposes of reservation in services.

புதுச்சேரி நகராட்சி
வருவாய் பிரிவு – 2
***

எண்:1169/பு.ந./ வ.அ.2/ 2023 -2024 தேதி: 03 JUL 2023

**மின்னனுஏலம் கோருவதற்கானநிபந்தனைகள்**

புதுச்சேரி நகராட்சிக்கு சொந்தமான வணிகவளாகங்களில் / அங்காடிகளில் கீழ்காணும் கடைகளுக்கு உபயோகிப்பாளர்களிடமிருந்து நகராட்சிமன்றம் சார்பில் 01.08.2023 முதல் 31.07.2026 (3 வருடகாலத்திற்கு) உரிமம் வழங்கும் பொருட்டு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. மின்னனுஏலம் வருகின்ற 20.07.2023 வியாழக்கிழமை அன்று காலை 11.00 மணிமுதல் பிற்பகல் 5.00 மணிவரை **www.auctionindia.com** என்ற வலைதளத்தின் இணையதளம் மூலம் நடைபெற உள்ளது.

Category wise allotment details

| Sl.No | Special Categories | Percentage of Reservation | Number of Shop proposed to allot |
|---|---|---|---|
| 1 | SC / ST | 15% | 10 |
| 2 | PH | 5% | 3 |
| 3 | Freedom Fighters | 15% | 10 |
| 4 | Ex-Service Man | 5% | 3 |
| 5 | Women | 5% | 3 |
| 6 | Pensioners retired from the service of the Union Territory of Puducherry | 5% | 3 |
| 7 | Other Categories / UR | 50% | 36 |
| | | Total | 68 |

| Sl.No | Details of shops remaining un-allotted / vacant | Size of the shop | Monthly upset licence fees got fixed from the Engineering Section, Pondicherry Municipality | EMD Amount @ 20% of the amount arrived by 12 months upset Licence Fees | Reservation |
|---|---|---|---|---|---|
| **MUTHIALPET SHOPPING COMPLEX SHOPS (29 Shops)** | | | | | |
| 1 | F.F-30 | 4 sqm | 2052 | **4925** | UR |
| 2 | F.F-31 | 4 sqm | 2052 | 4925 | UR |
| 3 | F.F-32 | 4 sqm | 2052 | 4925 | UR |
| 4 | F.F-33 | 4 sqm | 2052 | 4925 | UR |
| 5 | F.F-34 | 4 sqm | 2052 | 4925 | UR |
| 6 | F.F-36 | 6 sqm | 3078 | 7388 | SC / ST |
| 7 | F.F-38 | 6 sqm | 3078 | 7388 | UR |
| 8 | F.F-39 | 6 sqm | 3078 | 7388 | Freedom Fighter |
| 9 | F.F-40 | 6 sqm | 3078 | 7388 | UR |
| 10 | F.F-41 | 6 sqm | 3078 | 7388 | UR |
| 11 | F.F-42 | 6 sqm | 3078 | 7388 | UR |
| 12 | F.F-44 | 6 sqm | 3078 | 7388 | SC / ST |
| 13 | F.F-48 | 4 sqm | 2052 | 4925 | UR |
| 14 | F.F-54 | 4 sqm | 2052 | 4925 | Freedom Fighter |
| 15 | F.F-60 | 4 sqm | 2052 | 4925 | UR |
| 16 | F.F-61 | 4 sqm | 2052 | 4925 | UR |
| 17 | F.F-62 | 4 sqm | 2052 | 4925 | UR |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 18 | F.F-63 | 4 sqm | 2052 | 4925 | SC / ST |
| 19 | F.F-64 | 4 sqm | 2052 | 4925 | Physical Handicapped |
| 20 | F.F-65 | 4 sqm | 2052 | 4925 | Freedom Fighter |
| 21 | F.F-66 | 4 sqm | 2052 | 4925 | Women |
| 22 | F.F-67 | 4 sqm | 2052 | 4925 | Pensioner of UTG |
| 23 | F.F-68 | 4 sqm | 2052 | 4925 | Ex-Serviceman |
| 24 | F.F-69 | 4 sqm | 2052 | 4925 | SC / ST |
| 25 | F.F-70 | 4 sqm | 2052 | 4925 | Physical Handicapped |
| 26 | F.F-71 | 4 sqm | 2052 | 4925 | Freedom Fighter |
| 27 | F.F-72 | 4 sqm | 2052 | 4925 | Women |
| 28 | F.F-73 | 4 sqm | 2052 | 4925 | Pensioner of UTG |
| 29 | F.F-75 | 4 sqm | 2052 | 4925 | Ex-Serviceman |
| 30 | F.F-76 | 4 sqm | 2052 | 4925 | SC / ST |
| **GANESH NAGAR MARKET (ROUTHAN KUPPAM) (3 Nos)** | | | | | |
| 31 | GF-1 | 10 sqm | 2,000 | 4800 | Physical Handicapped |
| 32 | GF-2 | 10 sqm | 2,000 | 4800 | Freedom Fighter |
| 33 | GF-3 | 10 sqm | 2,000 | 4800 | Women |
| **SARAM MARKET (3 Nos)** | | | | | |
| 34 | G.F-7 | 9 sqm | 2349 | 5,638 | Pensioner of UTG |
| 35 | G.F-36 | 9 sqm | 2142 | 5,141 | Ex - Serviceman |
| 36 | F.F-25 | 9 sqm | 3548 | 8,515 | SC / ST |
| **M.G. ROAD (Clock Tower) 3 Shops** | | | | | |
| 37 | G.F | 31 sqm | 19,720 | 47,328 | UR |
| 38 | F.F | 31 sqm | 17,720 | 42,528 | UR |
| 39 | S.F | 31 sqm | 15,720 | 37,728 | Freedom Fighter |
| **VANDRAPET COMMUNITY HALL (OPPSITE TO AMALORPAVAM SCHOOL) (1 No)** | | | | | |
| 40 | G.F-2 | | 5000 | 12,000 | UR |
| **OZHANDHAI MARKET ( 18 shops)** | | | | | |
| 41 | G.F.9 (complex Back Side) | 9 sqm | 1125 | 2700 | UR |
| 42 | F.F-6 | 9 sqm | 865 | 2076 | SC / ST |
| 43 | F.F-10 | 9 sqm | 787 | 1889 | UR |
| 44 | F.F.-11 | 9 sqm | 787 | 1889 | Freedom Fighter |
| 45 | Back side G.F-1 | 4 sqm | 500 | 1200 | UR |
| 46 | Back side G.F-2 | 4 sqm | 500 | 1200 | UR |
| 47 | Back side G.F-3 | 4 sqm | 500 | 1200 | UR |
| 48 | Back side G.F-4 | 4 sqm | 500 | 1200 | SC / ST |
| 49 | Back side G.F-5 | 4 sqm | 500 | 1200 | UR |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 50 | Back side G.F-6 | 4 sqm | 500 | 1200 | Freedom Fighter |
| 51 | Back side G.F-7 | 4 sqm | 500 | 1200 | UR |
| 52 | Back side G.F-8 | 4 sqm | 500 | 1200 | UR |
| 53 | Back side G.F-9 | 4 sqm | 500 | 1200 | UR |
| 54 | Back side G.F-10 | 4 sqm | 500 | 1200 | SC / ST |
| 55 | Back side G.F-11 | 4 sqm | 500 | 1200 | UR |
| 56 | Back side G.F-12 | 4 sqm | 500 | 1200 | Freedom Fighter |
| 57 | Back side G.F-13 | 4 sqm | 500 | 1200 | UR |
| 58 | Back side G.F-16 | 4 sqm | 500 | 1200 | UR |
| **MUDALIARPET MARKET ( 8 shops)** | | | | | |
| 59 | G.F-4 | 10 sqm | 1085 | 2,604 | UR |
| 60 | G.F-5 | 10 sqm | 1085 | 2,604 | SC / ST |
| 61 | G.F-7 | 10 sqm | 1085 | 2,604 | UR |
| 62 | G.F-8 | 10 sqm | 1085 | 2,604 | Freedom Fighter |
| 63 | G.F-9 | 10 sqm | 1085 | 2,604 | UR |
| 64 | G.F-11 | 10 sqm | 1085 | 2,604 | UR |
| 65 | G.F-12 | 10 sqm | 1085 | 2,604 | UR |
| 66 | G.F-13 | 10 sqm | 1085 | 2,604 | UR |
| **THENGAITHITTU MARKET ( 2 shops)** | | | | | |
| 67 | G.F-3 | 10 Sqm | 847 | 2033 | UR |
| 68 | G.F.-4 | 10 Sqm | 847 | 2033 | UR |

1. இட ஒதுக்கீடு (Reservation) சிறப்பு பிரிவினரிடமிருந்து (Special Categorized Persons) விண்ணப்பம் கிடைக்க பெறாத கடை பொது பிரிவினருக்கு (General) ஒதுக்கீடு செய்யப்படும்.

2. இந்த ஏலம் இந்நகராட்சியின் அங்கீகரிக்கப்பட்ட சேவையாளர் (M/s. TVS Electronic Ltd.) மூலமாக www.auctionindia.com என்ற இணையதளத்தில் ஆன்லைன் மூலமாக நடைபெறும். ஆன்லைன் ஏல நிபந்தனைகள் மற்றும் பொது கட்டுப்பாடுகள் ஆகியவை அடங்கிய ஏல விவரங்கள் www.auctionindia.com என்ற இணையதளத்தில் வாயிலாக அறிந்துகொள்ளலாம்.

3. ஏலம் கேட்பவர் குறிப்பிட விரும்பும் ஏலத்தொகை நகராட்சியால் கணக்கிடப்பட்ட ஏல தொகையைவிட அதிகமாக இருக்கவேண்டும்

4. மின்னணு ஏல அறிவிப்பின் இதர விதிமுறைகள், நிபந்தனைகள் "www.py.gov.in". என்ற இணையதளத்தின் மூலம் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

5. ஏல நிபந்தனைகளின் விபரம் கணக்கிடப்பட்ட ஏலத்தொகை மற்றும் செலுத்த வேண்டிய முன்வைப்புத்தொகை விவரங்கள் விண்ணப்ப படிவத்தோடு வழங்கப்படுவதுடன் எச். எம். காசிம் சாலையில் (அரசு மார்பக நோய் பிரிவு அருகில்) உள்ள நகராட்சி கட்டிடத்தில் இயங்கிவரும் நகராட்சியின் வருவாய் பிரிவு-2 அலுவலகத்தில் உள்ள அறிவிப்பு பலகையில் வெளியிடப்பட்டுள்ளது.

6. மேலே கூறப்பட்ட மின்னனு ஏலத்தில் பங்கேற்பவர்கள் பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்ப படிவத்தை https: www.py.gov.in என்ற வலைதளத்திலிருந்து 11.07.2023 முதல் 17.07.2023 வரை பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். விண்ணப்பத்திற்கு ரூ.500/- மற்றும் முன்வைப்புத் தொகை (EMD) கேட்பு வரைவு ஓலை மூலம் அங்கிகரிக்கப்பட்ட வங்கி இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, கணக்கு எண்:15160100005000 **IFC Code No:IOBA 0001516** கடைசி தேதிக்குள் செலுத்திவிட வேண்டும்.

7. ஏலம் எடுப்பதற்கு தேவையான முன்வைப்புத்தொகையை **(EMD)** தேசிய மயமாக்கப்பட்ட வங்கி / கூட்டுறவு / ஷெடுல்டு வங்கியில் **“ஆணையர், புதுச்சேரி நகராட்சி”** என்ற பெயரில் கேட்பு வரைவோலையாக (DEMAND DRAFT) ஏல விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும். EMD தொகையை மின்னனு ஏலம் தொடங்கும் முன் விண்ணப்பத்துடன் இணைக்கவேண்டும். மேற்கூறிய மின்னனு ஏலத்தில் பங்கேற்பதற்கான பயனர் பெயர் மற்றும் ரகசிய குறியீட்டு எண் ஏலம் தொடங்குவற்கு முன் தரப்படும்.

8. மேலும், விவரங்கள் வேண்டுவோர் புதுச்சேரி நகராட்சி, வருவாய் பிரிவு-2 அலுவலகத்தை வேலை நாட்களில் அணுகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

9. விண்ணப்பத்துடன் வழங்க வேண்டிய விவரங்கள் (1). குடும்ப அடையாள அட்டை மற்றும் ஆதார் அட்டையின் புகைப்பட நகல் (2). மொபைல் எண் / தொலைபேசி எண்:

10. இணையதளத்திற்காக அளிக்கப்படும் முகவர் உபயோகிப்பவர் பெயர் (Password) ரகசிய வார்த்தை (User I.D) விண்ணப்பதாரரின் பொறுப்பில் பாதுகாக்கப்பட வேண்டும். தொலைந்துபோனால் புதிய ரகசியவார்த்தை மறுபடியும் தேவைப்படும்பட்சத்தில் மறுபடியும் விண்ணப்பக் கட்டணம் செலுத்த வேண்டும்.

11. கட்டாய முன்வைப்புத்தொகையை விண்ணப்பத்துடன் செலுத்த வேண்டிய கடைசி தேதி:17.07.2023 மாலை 3.30 மணி வரை. இந்த காலக்கெடுவிற்கு முன்னதாக முன்வைப்புத்தொகை கேட்பு காசோலையாக செலுத்துபவர் மட்டுமே ஏலத்தில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.

12. ஒவ்வொரு வகை உரிமத்திற்கும் தனித் தனியாக விண்ணப்பம் அளித்து அதற்குண்டான (EMD) முன் வைப்புத் தொகை செலுத்தவேண்டும்.

13. **L.1** மற்றும் **L.2** தவிர வெற்றிபெறாத ஏனைய ஏலதாரர்களுக்கு ஏல முன்வைப்புத்தொகைக்கான அவர்களுடைய வரைவு காசோலையை பத்து (10) நாட்களுக்குப் பிறகு திருப்பித்தரப்படும் ஏலத்தில் வெற்றிபெறுபவர்கள் அவர்கள் செலுத்த வேண்டிய முழுதொகையில் வைப்புத்தொகையை சரிசெய்து மீதத் தொகையை செலுத்த வேண்டும்.

14. வெற்றிபெற்ற ஏலதாரர் (L.1) ஒரு வருடத்திற்கான முழு ஏலத்தொகை (01.08.2023 to 31.07.2026) மற்றும் மூன்று மாத உரிமத்தொகைக்கு சமமான காப்புறுதி தொகையை மின்னனு ஏலம் நடந்து முடிந்த தேதியிலிருந்து மூன்று நாட்களுக்குள் செலுத்த வேண்டும். அப்படி செலுத்தத் தவறும்பட்சத்தில் அவருடைய ஏல முன்வைப்புத் தொகைக்கான கேட்பு காசோலையை இழக்க நேரிடும்.

15. ஏலத்தில் மேற்படி இனங்களுக்கு குறைந்தபட்ச கேட்புத் தொகை **ரூ.10,000/-க்கு** கீழிருந்தால் **ரூ.100/-ன்** மடங்காகவும் **ரூ.10,000/-க்கு** மேலிருந்தால் **ரூ.500/-ன்** மடங்காகவும் **ரூ.50,000/-க்கு** மேலிருந்தால் **ரூ.1,000/-ன்** மடங்காகவும் ஏலக்கேள்விகள் இருக்கவேண்டும்.

16. மேற்கண்ட ஏலத்தில் ஏதாவது பிரச்சனை ஏற்பட்டால் புதுச்சேரி நகராட்சி ஆணையரின் முடிவே இறுதியானது.

17. ஏலத்தை ஏற்றுக்கொள்ளவோ, ரத்துசெய்யவோ அல்லது ஏலத்தில் மாற்றம் செய்யவோ ஆணையருக்கு முழு அதிகாரம் உள்ளது.

18. ஏலத்தில் வெற்றிபெற்ற ஏலதாரருக்கு தற்போது உள்ள நிலையிலேயே தங்களுக்கு கடை ஒதுக்கீடு செய்யப்படும் மேலும், சொந்த செலவில் கடைக்குத் தேவையான பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

18. ஏலத்தில் வெற்றிபெற்ற ஏலதாரருக்கு தற்போது உள்ள நிலையிலேயே தங்களுக்கு கடை ஒதுக்கீடு செய்யப்படும் மேலும், சொந்த செலவில் கடைக்கு தேவையான பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

19. எந்தவொரு முன்னறிவிப்புமின்றி உரிமத்தை ரத்து செய்ய புதுச்சேரி நகராட்சி ஆணையருக்கு முழு உரிமை உண்டு அப்படிப்பட்ட நிலையில் உரிமத் தொகை குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் உரிமதாரருக்கு திருப்பித்தரப்படும்

20. மின்னணு ஏலத்தில் கலந்துகொள்பவர்கள் தங்கள் விண்ணப்பத்தினை ஏலம் விடப்படும் காலத்திற்கு கணக்கிடப்பட்ட குறைந்த பட்ச மாதாந்திர ஏலத் தொகையில் 20% தொகையை ஏல முன்வைப்புத் தொகையாக (EMD) புதுச்சேரி நகராட்சி ஆணையர் பெயரில் எடுக்கப்பட்ட கேட்பு காசோலை **(விரும்பத்தக்கது)** மற்றும் மின்னணு ஏல விண்ணப்பம் சமர்பிப்பதற்காக நிர்ணயிக்கபட்ட கடைசி தேதி மற்றும் நேரத்திற்குள் எச். எம். காசிம் சாலை (அரசு மார்பக நோய் பிரிவுக்கு அருகில்) நகராட்சி கட்டிடத்தில் இயங்கிவரும் நகராட்சியின் வருவாய் பிரிவு-2 அலுவலகத்தில் சமர்பிக்கவேண்டும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட **இந்தியன் ஓவர்சீஸ் வங்கி(நகர கிளை) கணக்கு எண்: 151601000005000, IFSC Code IOBA 0001516-ல் கடைசி தேதிக்குள் செலுத்த வேண்டும்.** விதிமுறைகளும் வரைமுறைகளும், ஏலம் கோரும் அறிவிப்பு (NIT) ஏல விவரங்கள், மின்னணு ஏல அறிவிப்பு, மாதாந்திர குறைந்தபட்ச ஏலத்தொகை போன்றவற்றை Website, https://www.py.gov.in மற்றும் www.pdymun.in வளைதளங்களில் பதிவிறக்கம் செய்து பார்வையிட முடியும். ஏல அறிவிப்பில் தேவைப்படும் திருத்தங்கள் மாற்றங்கள் எதுவாயினும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள வளைதளங்களிலேயே மேற்கொள்ளப்படும்.

**(S. SIVAKUMAR)**
**COMMISSIONER**